# வெளிநாட்டுத் தபால் விநியோகத்தில் மோசடி!

விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 மார்கழி 8 ரபி-அவ். 29 இதழ் 309
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 23-12-84

## பற்றைக்குள் கத்தை கத்தையாக
## கடிதங்கள், காசோலைகள்!!

[ஏ. வி. மாணிக்கம்]

யாழ். குடாநாட்டிலிருந்து வெளி நாடுகளுக்குச் சென்று வேலைவாய்ப்புப் பெற்றிருப்போர் இங்குள்ள தங்களுக்கு உரியவர்களின் விலாசங்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதங்கள், காசோலைகள் மோசடி செய்யப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பொறுப்பற்ற முறையில் சம்பந்தப்பட்ட சில ஊழியர்களே இவ்விஷமத்தனமான மோசடியில் ஈடுபட்டிருக்கலாமென நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

நேற்றுக் காலை யாழ். பிரதம தபால் அலுவலகத்துக்கு அண்மையில் உள்ள பற்றைக்குள்ளிருந்து சில விளையாட்டுப் பிள்ளைகள் கண்டபடி கிழிக்கப்பட்ட தபால்களையும் என்வெலப்புகளையும் அள்ளிக்கொண்டு செல்லும்பொழுது சில இளைஞர்கள் சந்தேகத்தின்மீது அவற்றைப் பறித்தெடுத்தார்கள். கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்கள் பலவும் அவற்றுள் காணப்பட்டன.

எழுதப்பட்டிருந்த கடிதங்களில் பல அந்தரங்கமான விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. பெறுமதி மிக்க காசோலைகள் அனுப்பப்படுவதாகவும் சில கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருந்தன.

எமக்குக் காண்பிக்கப்பட்ட கடிதங்களைக் கொண்டு அவை கடந்த 3ம்திகதியிலிருந்து 15ம் திகதிவரையான திகதிகள் அக்

[8-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

### ● இந்தியப் பிரதமர் ரஜீவ் அறிவிப்பு
## இலங்கைத் தமிழருக்கு இனி எவ்வாறு உதவுவது?
# இந்தியா விரைவில் தீர்மானிக்கும்

[சென்னை]

"இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதற்குக் கொழும்பில் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு பலனளிக்காததால், எவ்வாறு இனி அவர்களுக்கு இந்தியா உதவுவது என்பதை விரைவில் தீர்மானிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது'' என்று இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி நேற்றுக் கூறினார்.

சேலத்தில் நேற்று நடந்த பொதுக் கூட்டமொன்றில் ரஜீவ் உரையாற்றுகையிலேயே இவ்வாறு சொன்னார்.

''இலங்கைத் தமிழர்களின் பிரச்னையைச் சுமுகமானமுறையில் தீர்த்துவைப்பதற்கு இந்திய அரசாங்கம் தன்னால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்'' என்றும் இந்தக் கூட்டத்தில் உறுதி கூறினார்.

அவர் இக கூட்டத்தில் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

(8-ம் பக்கம் 5ம்கலம் பார்க்க)

### ஜனாதிபதி கூறுகிறார்
# "இந்திய நடவடிக்கையை பொறுத்திருந்து பார்ப்போம்"

(கொழும்பு)

''வடபகுதி பயங்கரவாதிகளுக்கு உதவிசெய்வது ஒரு பாரதூரமான குற்றம் என்பதினை நாம் இந்தியாவின் புதிய அரசாங்கத்துக்கு எடுத்துரைப்போம் இந்திய தேர்தல் முடிவடைந்த பின்னர்தான் இலங்கை பயங்கரவாதம் தொடர்பாக இந்திய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதினை நாம் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்'' என்று ஜனாதிபதி திரு ஜே. ஆர் ஜெயவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

புளத்சிங்களத் தொகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

''இலங்கை பயங்கரவாதத்துக்கு எதிராக ஏதாவதொரு நடவடிக்கை எடுத்தால், இந்திய மத்தியஅரசும் தமிழ் நாடும் தமிழர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கை என்று வியாக்கியானம்கொடுக்கின்றன தமிழ்நாடு பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கிறது. இது தொடர்பாக நாம் இந்திய புதிய அரசாங்கத்துடன் பொறுமையாக விருந்து பேச்சுக்களை நடத்துவோம்.

நாட்டில் ஏற்றஆட்சியமைப்பை ஏற்றுக்கொண்டு மத்திய அரசின் கீழ் உள்ளூராட்சி அமைப்பொன்றுஏற்படுவதனை

[8-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க]

### கொக்குவில் முற்றுகை
## கைவிடப்பட்ட வாகனத்தில்
# இரத்தக்கறை!

(யாழ்ப்பாணம்)

யாழ் காங்கேசன்துறை வீதியில் கொக்குவில் கிழக்குப் பக்கமாக 22 வாகனங்களில் சென்ற இராணுவத்தினர் நேற்றுப் பிற்பகல் முற்றுகையிட்டு பலத்த சோதனை நடத்தினர்.

நேற்றுமுன்தினம் யாழ். புகையிரதநிலையத்தில் வைத்து இரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களைக் கடத்திச் செல்வதற்கு உபயோகப்படுத்தப்பட்ட சிறியவாகனம் ஒன்று கொக்குவில் புகையிரத நிலையத்துக்கருகில் கைவிடப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டிருந்தது.

யாழ். ஐக்கியவியாபாரச் சங்கத்துக்குச் சொந்தமான இந்த லொறி கடந்த வியாழக்கிழமை கடத்திச் செல்லப்பட்டது.

கைவிடப்பட்ட லொறியுள் இரத்தக்கறைகள்காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் கவசவண்டிகளில் சென்ற இராணுவத்தினர் கொக்குவில்

[8-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க]

## சன்மானம் ரூ. 10 லட்சம்!

[இ. கந்தசாமி]

இனந்தெரியாத இளைஞர்களினால் யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட இரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் சம்பந்தமான தகவல்களைத் தருவோருக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படுமென்று பொலிஸ்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதினன்கு கிராமங்களில் வாழும பிரமுகர்களுடன் தொடர்புகொண்டு, இந்தக் கடத்தல் சம்பந்தமாக தகவல்கள் கிடைத்தால தந்துதவும்படியும், தேடுதல் முயற்சிக்கு உதவும்படியும் கேட்டுக்கொண்டார்.

### ● 'அமிர்' நேற்று விடுத்த அறிக்கை
# "தமிழ்ப் பிரதேசம் பயங்கர முற்றுகை!
# சாதாரண மக்கள் வாழ்க்கை ஸ்தம்பிதம்!!
## சர்வகட்சி மாநாடு தமிழ்மக்கள் அபிலாசைகளை பூர்த்திசெய்யவில்லை!"

இ. கந்தசாமி

''இந்த நாட்டின் தமிழ்ப் பிரதேசங்கள் பயங்கர முற்றுகைக்குள்ளாகியுள்ளது. மக்களின் சாதாரண வாழ்க்கை முடங்கியுள்ளது. கற்பழிப்பு, கொள்ளை, தீவைப்பு, கொலை எமது பிரதேசத்தை பயமுறுத்திவருகின்றது. ஏழை மக்களின் முகங்களில் பட்டினிச் சாயல்கள் தென்படுகின்றன. வடக்கு, கிழக்குப் பகுதிகளின் இன்றைய உண்மையான நிலை இதுவே''.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச்செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் சர்வகட்சிமகாநாட்டையொட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்

அமிர்தலிங்கத்தின் அறிக்கை தொடர்ந்து கூறுவதாவது:

''ஜனாதிபதி ஜயவர்த்தன 28-12-83ல் சர்வகட்சிமகாநாட்டில் கலந்துகொள்ளும்படி எம்மை அழைத்திருந்தார். இன்றைய தமிழ் மக்களின் பிரச்னை தொடர்பாக சில யோசனைகளின் அடிப்படையில் தீர்வு ஒன்றினை அவர்கக்கு எட்டும்வகையில் நாம் மகாநாட்டில் கலந்துகொள்ள முன்வந்தோம்

### தொடர்ந்த காரணம்

''அரசுதரப்பில் தெரிவிக்கப்பட்ட யோசனைகள் அமுல்படுத்தப்படுவதாக இருந்திருக்குமானால் தமிழர்விடுதலைக்கூட்டணி மகாநாட்டிலிருந்து வாபஸ்பெற்றிருக்கும். ஆனல் சுதந்திர தமிழ்ஈழ இராச்சியத்துக்கு ஈடான தமிழ்மக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யும் வகையில் ஒரு நிர்வாக அமைப்பைத்தேடி அமைக்கும் விதத்திலேயே நாம் தொடர்ந்து மகாநாட்டில் பங்குகொள்ள முன்வந்தோம்

''முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமது நல்லெண்ண உதவிகளை வழங்கியிருந்தார். அவரது

[8-ம் பக்கம் 1ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசி ஜளம்பரம்

## விற்பனைக்கு

திறம் மரத்தால் செய்யப்பட்ட உறுதியான மாடிப்படி ஏணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 46, பிரப்பங்குளம் ஒழுங்கை வண்ணார்பண்ணை. 1026

நல்ல அருமையான சுற்றுடலில், யாழ்ப்பாணம் சென்றல் கல்லூரிக்கு அருகாமையில், சப்பல் வீதியில், ஒரு வீடும் வளவும் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு சபேசன், 26 — 5-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 1024

கொக்குவில் சம்பியன் லேனில் காங்கேசன்துறை வீதியிலிருந்து 100 யார் தூரத்தில் ஒன்றரைப்பரப்பு காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: 167, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலை பேசி இல: 24182. 1009

புலோலி தெற்கு புற்றளைப்பிள்ளையார் கோவிலடிக்கு கிழக்குப் பக்கமாக தென்கிழக்கு மூலையில் இருக்கும் கட்டைப்புளியடி வயல் என்னும் பெயருடைய காணி, நெற் பர 6, குளி 6¾ விற்பனைக்கு உண்டு வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல: 1027 C/o 'ஈழநாடு' லிமிட். யாழ்ப்பாணம். 1027

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நான்கு கடைகளும் பின்புறம் சகல வசதிகளுடன் கூடிய வீடும் (ஒன்றரைப் பரப்பு காணி) விற்பனைக்குண்டு. கடைகள் காலியான நிலையில் உள்ளன. விபரங்களுக்கு: 63, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1052

ஆறுமாதங்கள் பாவித்த 8 அடி 'ஜெனறல்' குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு எஸ். செல்வசிவம், 49B இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணம். 1035

## விற்பனைக்கு

கொடிகாமத்தில், கச்சாய் கிராமசபைக்கு முன்னால் 5 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. பொ. அம்பிகைபாகன், கச்சாய் வீதி கொடிகாமம். 1058

மானிப்பாய்ச் சந்தைக்கு பக்கத்திலுள்ள ஒழுங்கையில் ஐந்து பரப்புக் காணியும் சிறிய வீடும் விற்பனைக்குண்டு விபரங்கட்கு: 60, அரசடி வீதி, யாழ்ப்பாணம் 1056

நல்லூரில் முத்திரைச்சந்திக்கு அருகில் 2½ பரப்பு காணியில் 4 அறைகளுடன் நவீன வசதிகளுடன் புதிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு. விளம்பர இல 1055. தொடர்பு: C/o 'ஈழநாடு' 1055

பாவனையில் உள்ள SONY கலர் T. V. 20 அங்குலம், N. V. 600 வீடியோ டெக், புத்தம் புதிய 6 Cu. FT FREEZER-HOOVER FLOOR POLISHER-NECCHI தையல் மெசின், ரலி 'ஸ்போட்ஸ்' சைக்கிள் எவ்வயதினரும் பாவிக்கக் கூடிய மடித்தல் சைக்கிள் ஆகியன உடனடியாக விற்பனைக்குண்டு. 23, சென்ற் பீட்டர்ஸ் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1046

## FOR SALE

Furnitures [தளபாடங்கள்] Glass Show Cases [கண்ணாடி சோக்கேஸஸ் Carpets [கம்பளங்கள்] Almyrah [அலுமாரி] Chairs [கதிரைகள்] Belgium Dressing Mirror [பெல்ஜியம் கண்ணாடி] முதலியன கிழமை நாட்களில் காலை 9-12 மணி வரை தொடர்பு கொள்ளவும் Business promoters (Private) Ltd, 11J Momsac Building First Floor, Stanley Road Jaffna. 1053

## வாடகைக்கு

இளவாலை பத்தாவத்தை ஒழுங்கையில் சகல வசதிகளுடன் கூடிய வீட்டில் இரண்டு அறை, ஹோல், குசினி ஆகியவை வாடகைக்கு விடப்படும். குடும்பஸ்தர்கள் மாத்திரம் தொடர்பு கொள்க. டாக்டர் வி. சிவஞானவேல், ஆஸ்பத்திரி யாழ்ப்பாணம். 1047

மின்சாரம் தண்ணீர் வசதியுள்ள வீடு 185/1 கில்னர் லேன் கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணத்தில்வாடகைக்கு உண்டு நேரில் தொடர்பு கொள்ளவும். 1060

## வகுப்புக்கள்

22-12-84 தொடக்கம் வகுப்புக்கள் நடைபெறும். வரமுடியாத மாணவர்சட்கு விசேட வகுப்புக்கள் நடாத்தப்படும் சயன்ஸ் அக்கடமி, யாழ்ப்பாணம். 1036

வைகாசி 1986 London En-gineering council part1 (A/L இரு விஞ்ஞான சித்திகள்) Part 11 B.Sc Engin-sering சமன்] City and Guilds Elec-trical, Quantity Surveying, Draughtsman ship (ஆறு மாத அட்வான்ஸ், ஒரு வருட தொடங்கினர். பயிற்சிகள்]; மூன்று வருட B.Sc Computer Science பரீட்சைகளுக்கான முழுநேர வார (Course Work உட்பட) வார இறுதி வகுப்புகள் தை 1985 திறமை, அனுபவ சாட்டட் பொறியியல் விரிவுரையாளர்களையும்வருடா வருடம் சிறந்த பெறுபேறுகளையும், இலண்டனால் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரே நிறுவனமாகிய JAST ஆல் 31-12-1984 முன் விண்ணப்பிக்கவும் தொடர்பு: உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 963

## மலிவு விற்பனை

100 லன்ச்சீட் ரூபா 5/-100 குறோசறிபேக்ஸ் ரூபா4/- 100சொப்பிங் பேக் ரூபா 18/- 00மார்கெட்டிங் பேக் ரூபா 44/-100கரியர்பேக்ரூபா 180/- 1கிலோ பொலித்தீன் ரூபா 33/-1பைக்கட் ஸ்ட்றோஸ்ரூபா 8/50 வியாபாரிகளுக்கு கழிவுகள்

Ceyco Traders
180/6 7B Keyzer Street
(உள்ளே)Colombo 11
1019

## திருட்டு!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உள்ள தனியார் மில் உரிமையாளரின் நெல்க் களஞ்சியத்தில் இருந்து சுமார் 150 மூடை நெல் இரவோடு இரவாக திருடப்பட்டுள்ளது.

## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
## ஏலவிற்பனை அறிவித்தல் –1985

வல்வெட்டித்துறை மீன்சந்தை 1985-01-01 தொடக்கம் 1985-12-31ந் திகதி வரைக்குமான காலப்பகுதிக்கு கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு 1984-12-28ந் திகதி முற்பகல் 10-00 மணியளவில் என்னால் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரால் பகிரங்க ஏலத்தில் குத்தகைக்குக் கொடுக்கப்படும்.

அட்டவணை

| விபரம் | 1984ம் ஆண்டிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட குத்தகைத் தொகை. | ஆரம்ப கேள்வித் தொகை | ஏலவிற்பனை இருப்பு, வைப்பு. |
|---|---|---|---|
| 1. வல்வெட்டித் துறை மீன்சந்தை | 49500/- | 54450/- | 1000/- |

எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ நகராட்சி மன்றச் செயலாளருக்கு அதிகாரமுண்டு.

கேள்வி கேட்க விரும்புவோர் அட்டவணையிற்குறிப்பிட்ட பிரகாரம் உள்ள தொகைகளை 1984 12-27ந் திகதி நண்பகல் 12-00 மணிக்கு பிந்தாமல் ஏலவிற்பனை இருப்புப் பணமாகச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

க. சுப்பிரமணியம்,
செயலாளர்,
நகராட்சிமன்றம். வல்வெட்டித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை. 19-12-1984. 1054

## 41வது நாள் நினைவஞ்சலி

அமரர்
செல்லையா சிவானந்தன்



பிறப்பு: 15–6–43

இறப்பு: 12–11–84

மறைந்த எம் அன்புக் கணவரின் இறுதிச் சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும், அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம் வழங்கியவர்களுக்கும், விசேடமாக யாழ். அரசினர் வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார், மற்றும் சகஊழியர்களுக்கும், பரியோவான் கல்லூரி இரத்ததானம் வழங்கிய மாணவர்களுக்கும் அதிபருக்கும் எமது நன்றி.

துயருறும் மனைவி, மக்கள்.
1059

## வெளிக்கள உதவியாளர்
## (ASST. FIELD OFFICER)

எமது ஸ்தாபனத்தின் வெளிக்கள (FIELD) வேலைக்கு தகுதியும், நல்ல அனுபவமும் உள்ள நடுத்தர வயதுடைய ஒருவர் உடனடியாக தேவை. பிணை ரொக்கம் 10,000/-. FIDELTY GUARANTEE 25,000/- செலுத்தல் வேண்டும்.

31-12-84க்கு முன் சிபார்சு கடிதங்களுடன் விண்ணப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்,
ஈழநாடு.

(1014)

## விமான டிக்கட்டுக்களை மலிவாகப் பெறுவதற்கும்

★ பிரான்ஸ் ★ ஜேர்மனி

மற்றும் நாடுகளுக்குச் செல்வதற்கான
பிரயாண ஒழுங்குகளை செய்வதற்கும்
யாழ்நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்

TET ரான்ஸ் யூறே ரவல்ஸ்

தொடர்பு: திரு. மகேந்திரராஜா,
ரான்ஸ் யூறே ரவல்ஸ் இல 6, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23831

## பேர்லின் (BERLIN)
## செல்பவர்களுக்கு ஒரு நற்செய்தி!

சிக்கனமான
பாதுகாப்பான
நம்பிக்கையான
நாணயமான

பிரயாண ஒழுங்குகளுக்கு உடனடியான ஆசனப்பதிவுகளுக்கும
இன்றே நாடுங்கள்

அமெரிக்கன் லோயிட்
(சிலோன்) லிமிட்டெட்,
(சர்வதேச விமானப்போக்குவரத்து முகவர்கள்)
AMERICAN LLOYD
(Ceylon) LIMITED
(International Air Transport Agents)

கொழும்பில் தொடர்பு கொள்ளும் முகவரிகள்:

151, தர்மபால மாவதத,
கொழும்பு - 07.
தொலைபேசி:
20344, 26911, 28347

W- 4, 5 ஆம் மாடி
"சிலிங்கோஹவுஸ்"
கொழும்பு – 01.
தொலைபேசி:
24494, 28892, 29806

★ யாழ் குடாநாட்டிலும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள் வெகுவிரைவில் அறிவிக்கப்படும். 1051

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியக் கடற்படை தளபதி எச்சரிக்கை:

# இந்திய கடல் பகுதிக்கு அச்சுறுத்தல்!

புதுடில்லி, டிச 21

''எமதுநாட்டைச்சூழவுள்ள கடல்பிரதேசம் பிரச்னைக்குரிய தாகியுள்ளது. எனவே கடற் படை அதிகாரிகளும், வீரர் களும் பூரண உஷார் நிலையில் இருக்கவேண்டும்'' என்று இந் தியாவின் புதிய பிரதம கடற் படைத்தளபதி அட்மிரல் ராதாகிருஷின் ஹரிராம் தலி ஹானி கூறியுள்ளார்.

தமது புதிய பொறுப்பை ஏற்ற பின்னரே மேற்கண்ட வாறு அவர் தெரிவித்தார்;

அவர் தொடர்ந்து கூறியதா வது; ''இந்திய கடல்பிரதேச அச்சுறுத்தலை மிகுந்த கடமை யுணர்வுடனும், அவதானத் துடனும் கடற்படையினர் எதிர்கொள்ளவேண்டும்'' என் றார்.

புதிய தளபதியின் வயது 54 ஆகும். இவர் இந்திய கடற் படையின் விமானப்பிரிவை மேலும் விரிவுபடுத்துவ திலேயே அதிகஆர்வங்கொண் டுள்ளார்.

அட்மிரல் ஓ. எஸ். டௌச னிடமிருந்தே இவர் தமது புதிய பதவியைப் பொறுப் டேற்ருர். (கி)

## கிராமசேவகர் இன்றி மக்கள் அவதி

[சுன்னுகம்]

மாதகல் பகுதிக் கிராமசேவ கராக தற்காலிகமாக பண் டத்தரிப்பு கிராம சேவகரே கடமை புரிகிருர். இவர் இரண்டு இடங்களிலும் கடமை புரியவேண்டியுள்ள ால், மாதகல் பகுதியில் இரண்டு தினங்கள் மட்டுமே அலுவலகத்தில் வேலைகள் நடைபெறுகின்றன. இதனுல் பொதுமக்கள் தமது அவசர தேவைகளை கிராம சேவகரை தேடி பண்டத்தரிப்புக்கு சென்று செய்யவேண்டி யுள்ளது.

இதனுல் பொதுமக்கள் பெரி தும் அதிருப்தி தெரிவித்துள் ளனர். மாதகல் கிராம சேவ கர் கடந்த சில மாதங்களுக்கு முன் சுட்டுக் கொல்லப்பட் டது தெரிந்ததே.

பயங்கரவாத நடவடிக்கை:

# இறந்தோர் காயப்பட்டோர்

## விபரங்களை வெளியிடவேண்டாம்

### அரசிடம் 'தேரோ' வேண்டுகோள்

(கண்டி)

''பயங்கரவாத நடவடிக்கை களின் போது கொல்லப்படு பவர்கள், காயப்படுபவர்கள் பற்றி அரசாங்கம் அறிவிக்கக் கூடாது'' என்று கண்டி மல் வத்தயைச் சேர்ந்த வண அளுத்கம தம்மானந்ததேரோ அரசாங்கத்தைக் கேட்டுள் ளார்.

மல்வத்தப் பகுதியில் இடம் பெற்ற கிராமோதய சபைக் கூட்டமொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

அவர் தொடர்ந்து கூறிய தாவது;

''பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளிலேயே தற் போது கவனஞ்செலுத்த வேண்டியுள்ளது இந்நிலையில் அந்நடவடிக்கைகளின்போது கொல்லப்படுபவர்கள், காயப் படுபவர்கள் பற்றிய தகவல் களை மக்களுக்கு அரசாங்கம் அறிவிக்கக் கூடாது. இது அவர்களுக்குத் தேவையற்றது.

''கொல்லப்படுபவர்கள் அல் லது காயப்படுபவர்கள் பற் றிய விபரங்களை பயங்கர வாதம் இலங்கையிலிருந்து முற்ருக அழிக்கப்பட்ட பின் னர் அரசாங்கம் வெளியிட லாம்'' என்ருர். (கி)

கடல் ரோந்துக்கு [redacted]

## பிரிட்டனிடம் உதவி கோருகிறது இலங்கை!

(லண்டன்)

இலங்கை அரசாங்கம் பிரிட் டனிடமும் கடற்படை ரோந் துப் படகுகளைக் கேட்டிருக் கிறது. இத்தகவலை அந்நாட் டின் வெளிநாட்டமைச்சு வெளியிட்டுள்ளது.

இலங்கையின் இக்கோரிக் கையை ஏற்காமல் விடமுடி யாதென்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் தமிழ் பிரிவினை வாதிகள் ஊடுருவுவதைத் தடுக்கும் வகையிலேயே பிரி டனிடம் நவீன கடற்படை ரோந்துப்படகுகளை இலங்கை கேட்டிருப்பதாகக் கூறப்பட் டது.

இதேவேளை அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றிடம் அவசர இராணுவ உதவிகளை யும் இலங்கை கேட்டிருப்பதா கக் கூறப்பட்டது.

# கடற்ருெழிலாளர் சங்கம் மூன்ருகப் பிரிக்கப்பட்டது

## அமைச்சின் சிபார்சுமீது நடவடிககை

(புலோலி நிருபர் திருச்செல்வம்)

கடற்ருெழில் அமைச்சின் சிபார்சின் பேரில் பருத்தித் துறை கடற்ருெழிலாளர் கூட் டுறவுச் சங்கம் மூன்று சங்கங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி கடற்ருெழிலாளர் களின் கோரிக்கையைத் தொ டர்ந்தே கடல்தொழில் அமை ச்சு பருத்தித்துறை கடற்ரு ழிலாளர் கூட்டுறவுச் சங்க த்தை மூன்று பிரிவாகப் பிரிக் கச் சிபார்சு வழங்கியது

தொண்டமானறு தொடக் கம் பொலிகண்டி வரையான பகுதி வல்வெட்டித்துறை கடற்ருெழிலாளர் கூட்டுறவுச் சங்கம் எனவும், பொலிகண்டி தொடக்கம் கற்கோவளம் வரையான பகுதி வடமராட்சி வடக்கு கடற்ருெழிலாளர் கூட்டுறவுச் சங்கம் எனவும், கற்கோவளம் தொடக்கம் குடாரப்புவரையான பகுதி வடமராட்சி கிழக்கு கடற் ருெழிலாளர் கூட்டுறவுச் சங் கம் எனவும் மூன்று சங்கங்க ளாகப் பிரிக்கப்பட்டுள்ளது

வல்வெட்டித்துறை கடற் ருெழிலாளர் கூட்டுறவுச் சங் கத் தலைவராக திரு. து வைத்திலிங்கமும், வடமரா ட்சிவடக்கு கடற்ருெழிலாளர் சங்கத் தலைவராக திரு' எஸ் விஜயநாதனும், வடம ராட்சி கிழசகு கடற்ருெழிலா ளர் கூட்டுறவுச் சங்கத் தலைவ ராக திரு. எஸ். கதிர்காமத் தம்பியும், யாழ். கூட்டுறவு ஆக்க உதவி அணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது வரைகாலமும் பருத் தித்துறையில் இயங்கி வந்த கடற்ருெழிலாளர் கூட்டுற வுச் சங்க அலுவலகம் இனி மேல் வடமராட்சி வடக்கு கடற்ருெழிலாளர் கூட்டுறவுச் சங்க அலுவலமாக இயங்கும் வல்வெட்டித்துறை கடற்ரு ழிலாளர் கூட்டுறவுச் சங்கத் திற்கும் வடமராட்சி கிழக்கு கடற்ருெளிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் புதிய அலுவல கங்கள் திறக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுவருகின்றன.

தொண்டமானறு தொடக் கம் குடாரப்பு வரையான பகு திகள் ஒரே கடற்ருெழிலாளர் கூட்டுறவுச் சங்கமாக இயங்கி வந்தமையால் மீனவர் தமது மீன்பிடி நடவடிக்கைகளை மேம்படுத்த பெரும் சிரம மடைந்து வந்ததாகவும், நிர் வாக ரீதியிலும் பெரிய சங்க மாக இயங்குவது பல நடை முறைச்சிக்கல்களை ஏற்படுத்தி வந்ததாகவும் தெரிவிக்கப் பட்டது.

உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து

LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

'லங்கா சீமெந்து லிமிட்டட்'

LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது 'லங்கா சீமெந்து'

தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்

விநியோகப்பகுதி,
லங்கா சீமெந்து லிமிட்டட்
கீரிமலை ரோட்,
காங்கேசன்துறை.
போன் :- 22605




கிறிஸ்மஸ் தினத்தில்

# இனத்தின் விடிவுக்காக உருக்கமாகச் செபிப்போம்

அக்கிரமத்தின் சங்கிலி களை அறுத்து அழுத்தியிருக் கும் நுகத்தடியை இறக்கி, பசித்திருப்பவனுக்கு அப்பத் தைப் பகிர்ந்து கொடுத்து. சுமையானதையெல்லாம் உடைத்தெறிந்து விலங்கிடப் பட்டவர்களைப் பார்த்து வெளியே வாருங்கள் என்று சொல்லவும், இருளில் இருப்ப வர்களை நோக்கி வெளிச்சத் திற்கு வாருங்கள் என்றுசொல் லவும், ஒடுக்கப்பட்டவர்களை உரிமை மக்களாய் விடுதலை செய்யவும் அன்று கிறிஸ்து

### ரூபன் மரியாம்பிள்ளை

பிறந்தார். எனவே கிறிஸ் மஸ் ஒரு மகிழ்ச்சியின் விழா விடுதலையின் விழா.

இன்று 19·4ம் ஆண்டு கிறிஸ்மஸ் இலங்கைத் தமிழர் மத்தியில் ஒரு சோகக் கட்டத் தின் உச்சியிலே ஆறுதலின் விழாவாக, அமைதியின் விழா வாக அமைகிறது.

இன்று தமிழ் மக்கள் பயங் கரம் நிறைந்த சூழ்நிலையில் ஒடுக்கப்பட்டு, உரிமைகள், உடைமைகள், உறவுகள் எல் லாம் பறிக்கப்பட்டு சோதனை யிலும் வேதனையிலும், பயத்தி லும் பதற்றத்திலும், கவலையி லும் கண்ணீரிலும், இழப்பி லும் இறப்பிலும் தனித்து நின்று துடிக்கிருர்கள் நீதி அன்பு, அமைதி. சமாதானம் என்பன இருக்கவேண்டிய இடத்தில் அடக்குமுறை, பதற்றம், பகை என்பன நிறைந்திருக்கின்றன.

இந்தக் கட்டத்தில்தான் ''விலையின்றிவிற்கப்பட்டீர்கள் பணமின்றிமீட்கப்படுவீர்கள்'' என்ற நற்செய்தியை அறிவிக் கவும், சமாதானத்தைத் தெரி விக்கவும் ''நாம் தரும் விடு தலை அருகில் உள்ளது நாம் அளிக்கும் மீட்பு வந்துகொண் டிருக்கிறது'' என்று எம்மை அமைதிப்படுத்தவும், சமாதா

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

வயிறே பெரிதாய் வாழ்ந்திடும் வாழ்வில்
ஓடிடும் எண்ணங்கள் — இது.
வாழ்வல்ல என்பது இயேசுவின் வார்த்தை
கூறிடும் சின்னங்கள்
— இயேசுகாவியம்.

# நமது நோக்கு

## வழி பிறக்கும்!

சர்வகட்சி மாநாடு முற்றுப் பெற்றது ஒரு பெரும் ஆறுதல். இதனை வெறும் கண்துடைப்பு என்று கருதி நாம் இவ்வாறு சொல்லவில்லை. அதற்கு மறுபிறப்பில்லை என்றும் சொல்லப்படவில்லை.

இன்று தமிழர் உரிமைக்குப் போராடும் இளைஞர் கூட்டமும் இங்குவாழும் தமிழ் மக்கள் அத்தனை பேரும் நீண்டகாலப் பிணக்கு எவ்வகையிலும், சமாதான தீர்வை ஏற்படுத்துவதை விரும்பியவர்கள் தனிநாட்டுக்குப் போராடும் இயக்கங்கள் நியாயத்துக்குக் கட்டுப்படும் எல்லை கடந்தவர்களல்ல. எதுக்கும் ஒருகணக்கு, பொறுமைக்கும் ஒருமட்டு என்ற கொள்கையில் ஆயுதப் போராட்டத்தில் இறங்கியவர்கள் வருங்காலத்தில் இந்தநாட்டில் மானத்துடன் வாழ விரும்பும் இளைஞர்கள், நாட்டின் இளைஞர் பிரச்னையை இளைஞர் விவகார அமைச்சர் தீர்த்து வைக்கும் வாய்ப்பு இருப்பதானல் தமிழ் இளைஞர் இயக்கத்துக்கு இன்று காணப்படும் பேராதரவு ஏது? தமிழ் இளைஞர்களை மனமாற்றத்தில் ஈடுபடுத்துவது அமைச்சின் தலையாய கடன்.

சிங்கள இளைஞர்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கென பிரத்தியேகமான நலவாழ்வுத் திட்டங்களை வகுத்து செயற்படுத்திவிட்டல், இக்குழப்பம், இந்த நெருக்கடி வகுப்புவாதத்தால் ஏற்பட்ட முன்னைய குழப்பங்கள் போல் ஒன்றுதான் தட்டிக்கழிக்கலாம்.

அவ்வாறு ஒன்றும் நிகழவில்லை. இன்று இலங்கைக்கு பேராபத்து என்று அரசு கொள்வதை எவரும் புரியாமலிருக்கிறதா? சிறுபான்மை இயக்கத்தின் சாதனை இது.

தமிழ் பயங்கர வாதிகள் என்று கடந்த ஐந்து வருடமாகக் கூறிவரும் அரசுஅதனைப் பூண்டுடன் ஒழிக்க Emergency 79 என்ற திட்டம் பிசுபிசுத்ததையும் அன்றுதொட்டு இன்றுவரை ஆட்சியைக் கலக்கவும், சிங்கள மக்களுக்கு பேரதிர்ச்சியும், அச்சத்தையும் ஏற்படுத்தக் கூடிய நிலையில் மலைபோல் வளர்ந்திருப்பதனல், விடுமுறை கழிக்கக் கூடுவதுபோல் இந்த ஆபத்தான தேசிய பிரச்னையை ஆராய்ந்து தீர்க்க சர்வகட்சி மாநாடு எவ்வாறு உதவும்?

நியாயமான தீர்வு என்பதற்கு கிளினிக்கல்(Clinical) குணம், சிங்கள பௌத்த, பௌத்த சங்க சிறிலங்கா சுதந்திர குழுவினரின் எதிர்ப்பே. இந்த எதிர்ப்பை நட்பாக மாற்றும் வழிவகைகளை அரசுகையாள முடியவில்லை. நாட்டை ஆளுவது யாரென்பதே மிகப் பெரிய பிரச்னை.

நாடனைத்திலும் நிகழ்ந்த அழிவு; அதனல் உலகனைத்திலும் உண்டான அபகீர்த்தி நட்பு நாடாகிய இந்தியாவுடன் வளர்ந்துவரும் பகைமை - இவற்றிற்கு ஈடுகொடுக்க உலக அரங்கில் உண்டாகும் அரசியல் போட்டி எவ்வாறு உதவும்? உள்ளத்தில் ஒளி வேண்டும். இருள் அகல ஒளிபிறக்கும்.

உலகில் அமைதி நிலவ வேண்டுமென்று அல்லும் பகலும் பிரார்த்தனை செய்யும் நாம் தமிழர் பிரச்னை என்றவுடன் இந்தியா தலையிட்டுத் தனது ராணுவ வலிமையால் இதனைத் தீர்த்து வைக்கவேண்டுமென்று ஒரு போதும் நினைப்பதில்லை ஒருவித அடிமைத்தனத்திலிருந்து இன்னென்றுக்கு இடமாற்றம் பெறுவதே அதன் கருத்து. ஆபத்தில் ஒரு நண்பனை, இனத்தவனை நாடுவது இயற்கை.

ஆனல் இன்றைய தமிழ் மக்களின் நிலை ஒவ்வொரு வீடு வாசலிலும் அழுகுரல் கேட்கும் நிலை. பலவிதத்திலும் இளைஞருக்கு, அவர்களுடைய உயிருக்கு, வருங்காலத்துக்கு ஆபத்தான நிலை. இதில் கணிசமான அக்கறைகொள்ளும் இந்தியாவும், அதன் இன்றைய- நாளையதலைவர்ரஜீவும் பங்கு கொண்டு தீர்த்துவைக்கும் திட்டமொன்றை நம்பி நாம் புதுவருடத்தில் நம்பிக்கை ஒளி காண்போம்!

## பட்டினியால் வாடும் மக்களுக்கு உணவு வழங்குங்கள்!

உண்ண உணவின்றி வருந்தும் மக்சளுக்கு உதவுங்கள்!

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக மன்னர் முதல் முல்லைத்தீவு கரையோரப்பகுதிகளில் தமது ஜீவனேபாயங்களை செய்ய முடியாத நிலையில் பட்டினிச் சாவை எதிர்நோக்கும் மக்களுக்கு உதவி செய்ய வருமாறு சகல தமிழ் மக்களையும் ''வரையறுக்கப்பட்ட அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்'' கோரிக்கை விடுத்துள்ளது.

எனவே பணம் படைத்தோர் இவர்களுக்கு உதவும் பண உதவிகளை காசோலையாக பின் வரும் முகவரிக்கு அனுப்பி உதவுமாறுவேண்டுகிறோம்.

பண்டங்களாகவோ மற்றும் உதவிகளாக வழங்குபவர்கள் எம்மிடம் தொடர்பு கொண்டால் எமது தொண்டர்கள் அவ்வவ் இடங்களில் உதவியைப் பெற்றுச் செல்வார்கள்.

வரையறுக்கப்பட்ட அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்.
66, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

ஊரடங்கு நேரத்தில்

# வீடுகள் மீது குண்டுகள்!

## இளம் பெண்ணும்சிறுமியும் ஆஸ்பத்திரியில்

(புலோலி நிருபர் ஏ. என். திருச்செல்வம்)

பருத்தித்துறைநகரில்நேற்று முன்தினம் இரவு பெரும் சத்தங்களுடன், குண்டுகள் வீடுகளின் மேல் விழுந்தன. நகரிலுள்ள மக்கள் அச்சம்காரணமாக பாதுகாப்புத்தேடி பதுங்கினர்கள். இளம்பெண் ஒருவரும், அவரது மகளான சிறுமியும் பலத்த காயங்களுக்குள்ளானர்கள். யாழ். ஆஸ்பத்திரியில்இவர்கள் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஊரடங்கு அமுலிலிருந்த இரவு 7-30 மணிக்கு இச் சம்பவம் நடந்தது,

பருத்தித்துறை பஸ்நிலையத்துக்கு அருகிலுள்ள அழகுராணி சிறிஸ்கந்தராஜா (வயது 30) என்ற இளம் பெண்ணும், மதுரா (வயது 4) என்ற சிறு குழந்தையுமே காயத்துக்குள்ளானவர்களாவர். இவர்கள் இருவரும், ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்ததால், வேதனையுடன் இரவைக் கழித்து அதிகாலை 7-30 மணியளவில், யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்கள் சுமார் 12 மணித்தியாலங்களின் பின்னரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்கள் சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டனர்

மற்றுமொரு வீட்டில் விழுந்த குண்டு அங்கு நின்ற வாழை, கமுகு மரங்களைப் பதம் பார்த்தன.

நேற்று அதிகாலை இச் சம்பவம் நடைபெற்ற இடங்களுக்கு இராணுவ உயர்அதிகாரிகள் சென்று நிலைமைகளை அவதானித்தனர். (கெ)

## நாவற்குழியில் பலத்த சோதனை

(யாழ்ப்பாணம்)

நாவற்குழிப்பகுதியில் நேற்று முன்தினம் ஆயுதப் படையினர் பலத்த சோதனையில் ஈடுபட்டனர்.

அவ்வீதியால் வந்த சக பஸ்களும்மறிக்கப்பட்டுச் சோதனையிடப்பட்டன.

அடையாள அட்டை இல்லாதவர்களும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

யாழ். நகர் வரும் வ. போ ச. பஸ்கள் நேற்று நண்பகல் கோப்பாய் ஊடாக வந்தன.

## கடத்தப்பட்ட வான்

(வண்ணர்பண்ணை)

இனந்தெரியாத இளைஞர்களால் கடத்தப்பட்ட வான் ஒன்று கொழும்புத் துறையில் அநாதரவாகவிடப்பட்டிருந்தது.

நேற்று காலை கொழும்புத்துறை சனசமூக நிலையத்திற்கு முன் காணப்பட்டஇவ்வாகனத்தைப்பொது மக்கள் பார்வையிட்டனர்.

## தலைவராகத் தெரிவு

புலோலி)

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தலைவராக திரு. சுப்பிரமணியம் கதிர்காமத்தம்பி கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளரினல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பருத்தித்துறை கடற்றொழில் அதிகாரியாகவும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் பணியாற்றிவருகின்றார். புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபை உபதலைவராகவும் புற்றளை ஐக்கிய நாணயசங்க உபதலைவராகவும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க இயக்குநராகவும் செயற்பட்டுவரும் திரு. கதிர்காமத்தம்பி சிறந்த சமூக சேவையாளருமாவார்.

## கிறிஸ்மஸ் தினத்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

னத்தின் விடுதலையைப் பெற்றுத்தரவும் கிறிஸ்துவை நினைத்து அவர் மீது நம்பிக்கை வைத்தவர்களாக நமது தமிழ் இனத்தின் விடிவிற்கும் விடுதலைக்கும் உருக்கமாக செபிப்போம். ஆடம்பரமற்ற அமைதியான கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களில் ஆண்டவரால் எல்லாம் முடியுமென்ற வார்த்தைகள் நம்மை வழிநடத்தட்டும்.

## பல்கலைக்கழக மாணவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரும், 20 மாணவர்களும் விசாரணையின் பின்னர் நேற்றுக்காலை விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களை ராணுவம் விடுதியில் வைத்து கைது செய்தது. (மா)

## பகலவன் போல் இறைமகனிப் பாரில் வந்தார்

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நத்தார் பண்டிகையை நினைவு படுத்தி இக்கவிதைகள் பிரசுரமாகின்றன.

செம்பவள மேனியொளி திகழும் தேவ
அம்பரனர் அருள்துலங்க சுதன் மனுவாய்
எம்பரனர் உம்பருறை வீடு நீங்கி
எழில்கொஞ்சு மழலையென அவதரித்தார்
மஞ்சுதவழ் கொஞ்சுமெழில் மாடமில்லை
மாடடையும் குடிலிடையில் அவர்பிறந்தார்
பஞ்சணைசேர் பவளமணித் தொட்டி லில்லை
பரமகனர் ஏழ்மையிலே அவதரித்தார்

விஞ்சுபுகழ் கோலோச்சு வேந்தர் குலக்
கோத்திரத்தில் பிறககவில்லை குழந்தை யேசு
பஞ்சடைந்த பாட்டாளி உள்ளம் தன்னை
பரமகனர் கோவிலெனக் கண்டார் போலும்
துஞ்சுகின்ற ஏழைகளின் சிரிப்பில் தெய்து
தூய்மை கண்டார்போலும் இறைவன் தானும்
கஞ்சமலர்க் கரம்விரித்துத் தொழுவந்தன்னில்
அஞ்சுகம் போல் அழகொளிர அவர்பிறந்தார்

சஞ்சூசை அப்பர்தனைத் தந்தையாக
சந்தமரி யாள்தன்னைத் தாயேயாக
சிந்தைமிகு வேற்றன்புத் தேவதேவன்
செகமீது மானிடப் பிறப்பெடுத்தார்
நெஞ்சத்து வஞ்சனைகள் சூது மாயை
நீருகித் தூசாகி நிறையன் போடு
சந்தணமும் சவ்வாது வாசனை சள்
சாற்றியே துதிசெய்து போற்றுவோமே

புலவர் முல்லைக்கவி

## நத்தார் கும்மி

நத்தார் பிறந்தது தோழியரே—எங்கள்
நாதன் கிறிஸ்து புகழ் பாடுங்களே......நத்

பெத்தேம் நகரில் பிறந்தவனை—நீங்கள்
போற்றித் துதித்துப் புகழ் பாடுங்களே...— நத்

வானத்துத் தாரகைகள் கூட்டங்களே— உங்கள்
மரிசுதன் மெய் அழகைப் பாடுங்களே...—நத்

ஆநிரை மத்தியில் தவழ்ந்தவனும்
அவன் அன்னை மரியாளின் மனுபுத்திரனும்
பாவிகள் நாம் செய்த பாவம் போக்கவே
பரலோகம்விட்டு வந்தவனும்

தேவாதி தேவனின் திருக்குமாரன்
ஏழைகள் உள்ளத்தை ஈர்த்திடும் அன்பன்
அஞ்ஞானம் அகற்றி மெஞ்ஞானம் வளர்த்திட
வேதத்தைப் போதித்த உத்தம நண்பன்...... நத்

— க. தங்கம்

## ஏசு பிறந்தார்

ஏசு பிறந்தார்— ஆயர்
இதயம் நிறைந்தார்
பாசமிறைத்து— அன்புப்
பயிரை வளர்த்தார்
நேச ராகுவோம் — நீதி
நேர்மை யாளுவோம்
மாசகற்றியே — மக்கள்
மாண்பு யர்த்து வோம்

அலைய லையாகத் — தம்மை
அணுகி வந்தோரை
மலைக் கழைத்துமே — வேத
விளக்க முரைத் தார்
புலரும் இவ் வேளை — அன்னர்
போதித் தவற் றைத்
தலைமே ற்கொண்டே நாம் — தங்கத்
தாள் கள் பணிவாம்

— மணிமன்றன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டிடங்களைப் பாதுகாக்கவும்

(பண்டத்தரிப்பு)

நாட்டின் தற்போதைய சூழ் நிலையில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் கட்டிடங்களையும், உபகரணங்களையும, அவற்றிக்கு சொந்தமான சகல பொருட்களையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கொழும்பிலுள்ள கிராம அபிவிருத்தி அமைச்சுசகலகிராமஅபிவிருத்திஅதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ள அவசர சுற்றறிக்கையொன்றில் கேட்டுள்ளது.

## கிறிஸ்மஸ் அமைதியாகக் கொண்டாடப்படும்

(பண்டத்தரிப்பு)

இம்முறை இப் பகுதியில் கிறிஸ்மஸ் பண்டிகை மிகவும் அமைதியான முறையில கொண்டாடப்படவுள்ளது.

இப்பகுதியில் பல இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டினால் மரணமடைந்ததையிட்டும், பலர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாலும் கிறிஸ்மஸ் பண்டிகை இம்முறை சோபை இழந்துள்ளது. கொண்டாட்டங்கள் எதுவும் இல்லாத வகையில் ஆலய பூசைகள் மட்டுமே இடம் பெறவுள்ளன.

## '1200 வோல்ற்ரேஜ்' மின்சாரம் தாக்கி பாடசாலை அதிபர் மரணம்!

[சாவகச்சேரி]

வரணி மகாவித்தியாலய அதிபர் கதிரவேலு கணேச பிள்ளை [42 வயது] கடந்த 20ந் திகதி அதிசக்தி கூடிய மின்சாரம் தாக்கி மரணமானார்.

இவரது வீட்டு வளவினூடாக 'லக்ஸபான' மின்சாரக் கோபுரக் கம்பமொன்று நிறுவப்பட்டுள்ளது. உருக்கினாலான இக்கம்பம் சுமார் 60அடி உயரமானதாகும். இந்த மின் கம்பத்தினூடாக மஸ்கெலியா 'லக்ஸ்சபான' மின்சாரம் வடபகுதி சுன்னாகம் மின்சார நிலையத்திற்குப் பாய்ச்சப்படுகிறது. இம்மின்சார சக்தி '1200 வோல்ற்ரேஜ்' களைக் கொண்டதாகும்.

அதிபர் கதிரவேலு கணேச பிள்ளை நேற்று முன்தினம் காலை இம் மின்கம்பத்தினூடாக முருங்கக்காய் பறிப்பதற்கே சென்றுள்ளார். கையில் நீண்ட மூங்கில் தடியொன்றையும் கொண்டு சென்றார். அப்போது பனி பெய்ததன் காரணமாக அம் மின் கம்பத்திலிருந்து மின்சாரம் நிலத்தில் பாய்ந்து அவரையும் பலி கொண்டதெனக் கூறப்படுகிறது.

மரணமானவர் அக் கம்பத்தினூடாகச் சென்றாரேதவிர அதனுடன் மோதவில்லையென்றும், மின்சாரம் தாக்கிய போது அவர் தூக்கி வீசப்பட்டாரென்றும் கூறப்பட்டது.

ஸ்தலத்திலிருந்து அவர் உடனடியாக சாவகச்சேரி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனல் அங்கு அவர் மரணமானதாக அறிவிக்கப்பட்டது. (கி)


வியாபாரப் பெயர்: டெலிபன்கன்

உற்பத்தியான நாடு: மேற்கு ஜெர்மனி

மாடல்: 5016. அளவு: 20" வர்ண டி.வி

# விலை: ரூபா 13,875/-

# பிரமாதம்!



இல்லந்தோறும் இருக்க வேண்டிய ஓர்புகழ் பெற்ற பெறுமதி வாய்ந்த டி.வி. அதுதான்

**டெலிபன்கன்**

அற்புத 'பெல்' தொலைக்காட்சி முறையை உலகிற்கு அறிமுகம் செய்த டெலிபன்கன் தயாரிப்பு

எமது நாட்டிற்கு முற்றிலும் இசைவாக்கப்பட்டது. செட்டுக்கு இரு வருட உத்தரவாதம் படக்குழாய்க்கு மூன்று வருட உத்தரவாதம்.

GARADS

TELE FUNKEN

# டெலிபன்கன்

இலங்கையில் விற்பனையாகும் டி.வி களில் முதற்தரம் வாய்ந்த மேற்கு ஜெர்மன் டி.வி.

காட்சியறை: 467, யூனியன் பிளேஸ், கொழும்பு 2. தொலைபேசி:548238,93719

யாழ்ப்பாணம் - மகாராஜா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிட்டெட், கே கே.எஸ். வீதி. தொலைபேசி. 021-24267

கண்டி காட்சியறை: 78, இராஜ வீதி. தொலைபேசி: 08-25670


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செட்டிக்குளம் பகுதியில் 28 வீடுகள் எரிக்கப்பட்டன

(வவனியா)

செட்டிகுளம் பிரிவில் இரு கிராமங்களில் வசித்துவந்த ஏழைகளுடைய 28 வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன.

கந்தசாமி நகரில் 13 வீடுகளும், பெரியகட்டு என்ற இடத்தில் 15 வீடுகளும் முற்ருக எரிந்துவிட்டதாக தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

அதேவேளை பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உடுப்பதற்கு கூட உடைகள் இன்றி தவிப்பதாகவும், அன்ருட உணவுக்கு கூட மிகவும் கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிவில் உடையில் வந்தவர்களே இந்த ஏழைகளுடைய குடிசைகளுக்கு தீ வைத்ததாகவும் கூறப்படுகிறது.

## நகர் சுத்திகரிப்பு பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகர சபையில், கடந்த சில தினங்களாக அத்தியாவசிய சேவைகளான மின்சார, சுகாதார நீர் விநியோக, வீதி மலகூட சுத்திகரிப்பு வேலைகள் தடைப்பட்டுள்ளன.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு சீ. வீ. கே சிவஞானம் இதுபற்றி இணைப்பு அதிகாரி திரு. நளின் செனிவிரத்தின, யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

இதுபற்றி அவர் உள்ளூராட்சி அமைச்சருக்கும் அறிவித்துள்ளார். அவர் அனுப்பிய மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது;- சுகாதார பகுதி லொறிகளுக்கு இன்னும் அனுமதிப் பத்திரம் கிடைக்காததனுல், யாழ் வீதிகளில் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. மின்சாரப் பகுதி நீர் விநியோக வேலைகள், மலகூடச் சுத்திகரிப்பு வேலைகளும் தடைபட்டுள்ளன. [மா-கி]

## மன்னுர் பொலிஸ்வீதி தடை!

(மன்னுர்)

மன்னுர் பொலிஸ் நிலையத்தின் முன்பாகவுள்ள வீதியில் தடைகள் போடப்பட்டு போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.

இதனுல் வாகனப் போக்குவரத்துக்கள் யாவும் மன்னுர் பெரியகடை வீதியினூடாக நடைபெற்று வருகிறது.

பாதுகாப்பு கருதியே இந் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

## கால்நடையாக வேலைக்கு வரவேண்டியுள்ளது

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சிமெந்து ஆலைக்கு வேலைக்கு வரும் தொழிலாளர்கள் பஸ் சேவைகள் போதுமானதாக இல்லாமையால் சில சமயங்களில் கால் நடையாகவே வந்து போக வேண்டியிருப்பதால் பெரிதும் கஷ்டமனுவிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சாங்கேசன்துறை சிமெந்து ஆலைக்கு யாழ். மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்து ஏராளமான தொழிலாளர்கள் வந்து போவதால் அவர்கள் பஸ்ஸில் இடம் பிடிக்க முடியாமல் பெரிதும் கஷ்டமுறுகிருர்கள்.

பஸ் சேவைகள் போதுமானதாக இல்லாமையால் அவர்கள் கால்நடையாகவே வேலைக்கு வந்து போக வேண்டியுள்ளதால் பெரிதும் கஷ்டமுறுவதாக கூறப்படுகிறது.

## திருநெல்வேலி 'சூரன்' லண்டன் சென்ருர்!

(நீர்வேலி)

யாழ்பபாணம் திருநெல்வேலி சிற்பாலயத்தில் உருவாக்கப்பட்ட சூரன், மயில், எலிவாகனங்கள் இலண்டனிலுள்ள முருகன் கோவிலுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

லண்டன் 'ஹைய்ரேட்' முருகன் கோவில் பரிபாலனசபையின் வேண்டுகோளின் பேரில் ஆறுமுகம் சிற்பாலய அதிபரும், அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கத் தலைவருமான சிற்பக் கலாநிதி ஆறுமுகம் ஜீவரட்ணம் மேற்பார்வையில் உருவாக்கப்பட்ட இந்தவாகனங்கள் வடபகுதியின் சிற்பக்கலை வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். மேலும் இச்சிற்பாலயத்திலிருந்து சிங்கப்பூருக்கும் சிலவாகனங்களும், மணவறையும் உருவாக்கித் தருப்படி கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாகன அனுமதிப் பத்திரம்

(மாவிட்டபுரம்)

புதிய ஒழுங்கு விதிகளின் படி வாகனங்களை வைத்திருப்பது, உபயோகிப்பது தொடர்பான அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கும் வேலைகள் வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இன்று முதல் இடம் பெற உள்ளன.

மேற்படி புதிய ஒழுங்கு விதிகள் பிரகடனப் படுத்தப்பட்டதையடுத்து வாகன அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்காக ஏராளமான வாகனச் சொந்தக்காரர்கள் வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு படையெடுத்து வந்தனர்.

ஆனுல் இதுகுறித்த பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு சரியான முறையில் கிடைக்காமையால் இந்த அனுமதிப் பத்திரங்களை வழங்குவது தாமதமாகியது

தற்போது இந்த அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட உள்ளன.

## 20 தொன்வாயு நச்சுத்தன்மை அகற்றப்பட்டது

புதுடில்லி டிச 21

போபால் யூனியன் காபைட் தொழிற்சாலையில் 20 தொன் வாயுவின் நச்சுத்தன்மை இதுவரை அகற்றப்பட்டுள்ளது

எஞ்சியுள்ள 2 தொன் வாயுவின் நச்சுத்தன்மையை அகற்றும் வேலைகள் தொடர்ந்து நடை பெறவுள்ளன.

## புதிய வைத்திய அதிகாரி

(பண்டத்தரிப்பு)

சங்கானை அரசினர் வைத்தியசாலை புதிய பொறுப்பதிகாரியாக டாக்டர் (திருமதி) எம். யோகராசா இம்மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த பல வருடங்களாக இப்பதவி வெற்றிடமாக இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. இப்பகுதியிலுள்ள பொதுநல இயக்கங்கள் இப்பதவியை நிரப்புமாறு சுகாதார திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்திருந்தன.

## பெரும்போக செய்கை பாதிப்பு

[சுன்னுகம்]

வடபகுதியில் பெரும்பாலான பகுதிகளில் இவ்வருட பெரும்போக வெங்காயச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூலை கலவரங்களினுல் கொழும்பில் பல சந்தைப்படுத்தும் கடைகள் சேதமடைந்தன. இதனுல் சென்ற பெரும்போக உற்பத்திப் பொருட்களை அங்கு விற்பனை செய்யமுடியாத நிலை ஏற்பட்டது.

இம்முறையும் பெரும்போக செய்கை, வாகனப்போக்குவரத்து சீரின்மை, எரிபொருள் தட்டுப்பாடு என்பவற்ருல் வெங்காய உற்பத்தி முன்னரை விடக் குறைவாகவே மேற்கொள்ளப்படுவதாக விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் தெரிவித்தார்.

## விடுதலை செய்யுமாறு மகஜர்

[சுழிபுரம்]

சுழிபுரம், பண்ணுகம், பனிப்புலம் ஆகிய பகுதியில் சென்ற செவ்வாய், புதன் கிழமை ஆகிய நாட்களில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட வாலிபர்களின் பெற்ருேர்கள் நியாயம் கோரி தமது பிள்ளைகளை உடன் விடுதலை செய்யுமாறு ஓர் மகஜர் மூலமாக யாழ் அரசாங்க அதிபரை வேண்டியுள்ளனர்.





# நெஸ்பிறே வெற்றியாளர் போட்டி நீடிக்கப்பட்டுள்ளது!

தொடர்ந்து பங்குபற்றுங்கள்.
பரிசு பெறுவோரின் பெயர்கள்.
ரூபவாஹினியில் திங்கள் இரவு 8.10 க்கும் ஐ ரீ. என். இல் செவ்வாய் இரவு 7-25 க்கும் அறிவிக்கப்படும்.

## கடந்தமாத நெஸ்பிறே வெற்றியாளர்கள் தலா ரூ. 5000/– பரிசு

எஸ். எச். தயானந்த
131 B, வெலிவிற்ற,
கடுவெல

நலின்பெர்ணுண்டோ
18 ரத்னகார பிளேஸ்,
தெகிவளை.

ஜீ. ஆர். சனத் வித்யானந்த ஆரியதாச
வேவல,
நவநல்வத்த.

## நீங்களும் வெற்றிபெறலாம்

★ நெஸ்பிறே பக்கெட் டின் பின் புறம் பாருங்கள்.
★ நெஸ்பிறே அருந்துவோரின் நாட்டைத் தெரிவு செய்யுங்கள்
★ விடைக்கூண்டையும் கூப்பனையும் நிரபபுங்கள்
★ த. பெ. இல. 1119, கொழும்பு, என்ற முகவரிக்கு அனுப்புங்கள்
★ நீங்கள் மீண்டும் மீண்டும் பரிசு பெறலாம்.

நெஸ்பிறே
வளரும் பிள்ளைகளுக்கு நெஸ்லே வழங்கும் பால்


## பட்டினி சாவிலிருந்து காப்பாற்றவேண்டும்

[யாழ்ப்பாணம்]

பாதிப்படைந்துள்ள வடபகுதி மக்களை பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்ற உடனடியாக உணவுப் பொருட்களை இலவசமாக விநியோகிப்பதுடன் சமுதாய உணவு விடுதிகளை அமைக்க வேண்டும்.

கொக்குவில் கிழக்கு பிரஜைகள் குழுவினர் நேற்று யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கத்திற்கு அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு கோரியுள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: அரச உதவி கிடைக்காவிடில் சர்வதேச உதவி ஸ்தாபனங்களின் கவனத்தை ஈர்ந்து உதவிபெற மக்கள் விரும்புகிருர்கள்

அரசின் புதிய சட்டங்களினுல் மக்களின் அன்ருட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. (மா-க)

## பயங்கரவாதிகளும் தமிழ் பொலிசாரும்!

(கொழும்பு)

"சாவகச்சேரி பொலிஸ் நிலைய தாக்குதலின்போது அங்கு கடமையாற்றிய தமிழ் பொலிசார் பயங்கரவாதிகளுடன் சேர்ந்து செயல்பட்டிருக்கலாம்" என்று பொல்காவலை எம். பி. திரு சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் பேசுகையில் இவ்வாறு கூறிய அவர், சாவகச்சேரியில் 32 தமிழ் பொலிசார் கடமையாற்றிய போதிலும் தாக்குதலுக்கு முன்னர் 15 பேர் லீவில் சென்றுவிட்டனர். ஏனையோரும் தாக்குதலின்போது இருக்கவில்லை என்றும் கூறினர்.

## பாம்புதீண்டி மரணம்

[திருகோணமலை]

விஹாரைக்குச் சென்று வழிபட்டுவிட்டு வீடுவந்து படுத்தவர் நள்ளிரவில் பாம்பு தீண்டி மரணமானுர்.

திருகோணமலை தம்பலகாமம் பகுதியில் இச் சம்பவம் நிகழ்ந்தது பி ஹேரத் என்பவரே மரணமானவர் கி. ஜீ. நந்தாவதி என்ற இவரது மனைவி மரண விசாரணை அதிகாரி தி. யூ குமாரநாயகத்திடம் இச் சம்பவத்தை விளக்கினுர்.

சம்பவதினம் இரவு இவரது கணவர் விஹாரையிலிருந்து வீடுவந்து நித்திரை கொண்டார் நள்ளிரவில் எழுந்து பாம்பு கடித்துவிட்டதாக மனைவியிடம் கூறினுர்.

மனைவி பாயை அகற்றிப் பார்த்தபோது பாம்பொன்று சுருண்டுகிடக்கக் காணப்பட்டது

உடனடியாக விஷக்கடிவைத்தியரிடம் அவர் கொண்டு செல்லப்பட்டார் அங்கு சிகிச்சை பலனளிக்காததால் அவர் மரணமானுர்.

## தட்சர் கைச்சாத்து

பீக்கிங் டிச. 21

ஹொங்கொங்கை 1997-ம் ஆண்டில் சீனுவிடம் ஒப்படைக்கும் ஒப்பந்தத்தில் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரட் தட்சர் கைச்சாத்திட்டுள்ளார். (வெ)

## சம்பளப் பணம் கொள்ளை

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில், ஊழியர்களுக்கான சம்பளப்பணம் 22 ஆயிரம் ரூபா நேற்றுக்காலை 11-45 மணியளவில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கி சகிதம் வந்த இனந்தெரியாத இரு இளைஞர்கள் வைத்திய அதிகாரியை மிரட்டி இக் கொள்ளையை நடத்தியுள்ளனர்.

## ஆயிரம் ஏக்கருக்குமேல் உருளைக்கிழங்கு

(வண்ணுர்பண்ணை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வருட காலபோகச் செய்கையில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதற்கான விதை கிழங்குகள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கமத்தொழிற் சேவை ஆணையாளர் திரு க. பரமலிங்கம் தெரிவித்தார்.

கமநலச்சேவை நிலையங்கள் மூலம் 2,520 மூடை விதை கிழங்குகளும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 4,200 மூடை விதை கிழங்குகளும் விநியோகம் செய்யப்பட்டுள்தாகவும் இதன் பிரகாரம் ஐம்பதுவீதமான விதை கிழங்குகள் இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராணி** (யாழ்ப்பாணம்)
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

**வின்ஸர்** (யாழ்)
10-30 மட்டும்
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மனோரமா
**சிவப்பு சூரியன்**
(ஈஸ்ட்மன் கலர்(

**ஸ்ரீதர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30.
கமலஹாசன், ஸ்ரீதே
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)

**றீகல் மினி**
10-15, 1-30
மோகன்... நளினி...
ஜெய்சங்கர்.. சத்யராஜ்..
நடிக்கும்
மணிவண்ணனின்
**24 மணி நேரம்**

இன்று முதல்
**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00,
சந்திரசேகர், சுகாசினி
ராஜீவ்
**பாலைவனச்சோலை**
புதிய பிரதி
(ஈஸ்மன் கலர்)
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.

**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film -
Action packed)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30,
சிவாஜி, கமலகாசன்,
ஸ்ரீதேவி
நடித்த
**சத்தியம்**
(ஈஸ்மன் கலர்)

# மின்சாரப்பகுதி ஊழியர்களை காப்புறுதி செய்யப் பணிப்பு!

(திருகோணமலை)

ஒரு மின்சாரப் பொறியியலாளரை 2 லட்சம் ரூபாவிற்கும், 1ஆம் 2ஆம் தர மின் தொழில்நுட்ப அதிகாரிகளை 1 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவிற்கும், 3ம் தர தொழில்நுட்ப அதிகாரியை 1 லட்சம் ரூபாவிற்கும் ஏனைய ரக மின் ஊழியர்களை 40,000 ரூபாவிற்கும் காப்புறுதிசெய்ய வேண்டும் என்று சகல மாவட்ட அபிவிருத்திசபை, மாநகரசபை, நகரசபைகள் ஆகியனவும் பணிக்கப்பட்டுள்ளன.

புதிய காப்புறுதித் தொகைகளை நிர்ணயஞ்செய்து சகல உள்ளூராட்சிச் சபைகளுக்கும் உள்ளூராட்சிச் சேவைத்திணைக்களம், சுற்றுநிருபம் ஒன்றை அண்மையில் அனுப்பிவைத்துள்ளது

இந்த புதிய தொகை நிர்ணயப்படி, ஆண்டு தோறும் என்ஜினியருக்காக 1260 ரூபாவும் முதலாம் இரண்டாம் தர அதிகாரிக்காக 693 ரூபாவும் ஏனையதர ஊழியர் ஒவ்வொருவருக்கும் 252 ரூபாவும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சிச் சபைகள் 'பிரிமியம்' ஆக காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## சுழிபுரத்தில் அழுகைக் குரல்

[சுழிபுரம்]

சுழிபுரம் பகுதியிலுள்ள பலரது இல்லங்களில் கடந்த சில தினங்களாகப் பெண்கள் ஒரே அழுகைக்குரலுடன் சோகமயமாக இருக்கின்றனர்.

பல வாலிபர்களைக் காணவில்லையாம். இவர்கள் எங்கே சென்றார்கள்? யாரால் அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்பதைத் தெரியமுடியாமலுள்ளதால் பிள்ளைகளின் பெற்றோர்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனனர். இவர்கள் சம்பந்தமான தகவலொன்றும் தெரியவில்லை.

## யாருடையது?

உடுவில் கிழக்கு திரு. துரைசிங்கம் ஸ்ரீஸ்கந்தராசா, குருநகர் மடம் வீதி திரு. ஞானராஜா ஸ்ராலின், வவுனிக்குளம் செல்வபுரம் திரு, சவரிமுத்து சூசைப்பிள்ளை, கரவெட்டி வடக்கு திரு. வடிவேல் முருகன் நடராசா, சூடுவெந்தபுலவு திரு. மாணிக்கம் மனோகரராசா, கரணவாய் தெற்கு திரு. சிவலிங்கம் சிவபாதலிங்கம், எழுவைதீவு திரு. அம்பலவாணர் முத்துச்சாமி, குருணகல் புத்தளம் வீதி திருமதி மொஹமொட் பத்திஷ நஹுமா உம்மா, கொழும்புத்துறை கடற்கரை வீதி திருமதி விக்ரோறியா ஆபிரகாம்பிள்ளை, குருணகல் திருமதி மைமுன் உம்மா ஆகியோரின் அடையாள அட்டைகள் 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## அரசாங்க அதிபர்களுக்கு லலித் கோரிக்கை

(கொழும்பு)

''அரசாங்க அதிகாரிகள் சிவில் நிர்வாகங்களை மேற்கொள்ளும்போது இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்''

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி கொழும்பில் நடைபெற்ற அரச அதிபர்களின் மகாநாட்டில் உரையாற்றுகையில் கூறினார்

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்: ''அரசாங்க அதிபர்கள் அரசாங்கத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இயங்கிப் பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டும்'' என்று கூறினார்.

## அவசரகாலச்சட்டம் நீடிப்பு

(கொழும்பு)

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# இப்படியும் நடக்கிறது

தமிழ் மக்களின் ஒரு சொத்தாகக் கருதப்படும் தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையம், உரிய வைத்திய நிபுணர்கள் இல்லாத காரணத்தினால் 'அநாதை' யாக இருந்துவருவது ஊர் அறிந்த உண்மை.

இப்பொழுது ஒரு புதுச்செய்தி வெளியாகியிருக்கிறது. அதாவது—

புற்றுநோய் சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்ற அமெரிக்க டாக்டர் ஒருவர் விரைவில் கொழும்புவரப் போகிறார். இங்கு வந்ததும் குறிப்பிட்ட தொகை டாக்டர்களுக்கு பயிற்சியளிக்கப் போகின்றார். பயிற்சி முடிந்ததும் அத்தனை டாக்டர்களும் புற்றுநோய் சிகிச்சைத்துறையில் நிபுணத்துவம் பெற்றுவிடுவார்கள்.

சந்தேகம் (1): மேற்படி பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டது உண்மையா?

சந்தேகம் (2): தமிழ் டாக்டர்கள் எவருமே மேற்படி துறைக்கு (M D. Course) விண்ணப்பிக்காதது-அதாவது விஷயமே தெரிந்திருக்காதது உண்மையா?

சந்தேகம் (3): அமெரிக்க டாக்டரின் நேரடிப்பயிற்சி வகுப்புக்கள் மகரகமவில்தான் நடக்கப்போவது உண்மையா?

—ஊடுருவி

# வங்கி உதவிமுகாமையாளர் வீட்டில் ரூ. 18,000 நகைகள் ஊரடங்கு நேரத்தில் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோயில்வீதியிலுள்ள யாழ் இலங்கை வங்கி உதவி முகாமையாளர் திரு பி. ஏ. அருமைநாயகத்தின் வீட்டில் கடந்த 18ம் திகதி இரவு 10-30 மணியளவில், ஊரடங்குச் சட்ட நேரத்தில்துப்பாக்கி முனையில் 18.000 ரூபா நகைகளும். 4,500 ரூபா ரொக்கப் பணமும், உடுபிடவைகள், றேடியோ, கசெட், கைக்கடிகாரங்கள், சைக்கிள் ஆகியன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இயக்கமென்று கூறி; 5 இளைஞர்கள் வந்துஇக்கொள்ளையை நடத்தியதாகக் கூறப்பட்டது.

வீட்டிலுள்ளவர்களை துப்பாக்கிமுனையில் பயமுறுத்தி, ஒரு அறையில் வைத்துப்பூட்டிவிட்டே இக்கொள்ளை நடத்தப்பட்டதாகக் தெரிவிக்கப்பட்டது,

இக்கொள்ளை தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## கணபதி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் பழம்வீதி ஸ்ரீ சித்திவிநாயகர் கோவிலில் லக்ஷார்ச்சனை சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இம்மாதம் ஒன்பதாம் திகதி ஆரம்பமான விநாயக சஷ்டிவிரதம் இம்மாதம் இருபத்து எட்டாம் திகதி பூர்த்தி பெறுகிறது. இதனையொட்டி விநாயகப் பெருமானுக்கு தினமும் அபிஷேகம் லக்ஷாச்சனை நடைபெற்று எதிர் வரும் வெள்ளிக்கிழமை காலை ஆறு மணிக்கு கும்பபூஜையுடன் கணபதி ஹோமம் லக்ஷார்ச்சனை நடைபெறும்.

## யாருடைது

பாஷையூர் 3ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த திரு.ஜேக்கப் குருப், வண்ணார்பண்ணை நாவலர் வீதியைச் சேர்ந்த திரு முத்தையா ஸ்ரீதரன், உரும்பராய் வடக்கைச் சேர்ந்த திரு. தவராசாகா சந்திரகுமார், தருமபுரம் முல்லைத்தீவு வீதியைச் சேர்ந்த திரு. இராமசாமி சிறீதரன், வேலணை கிழக்கைச் சேர்ந்த ஸ்ஏ. சோமசுந்தரம் பசுபதி, புங்குடுதீவு மேற்கைச் சேர்ந்த திருமதி இராச இராசேஸ்வரி பசுபதி, இடைக்காடு பத்தமேனியைச் சேர்ந்த திருமதி. மேரி அக்கினேஸ் தங்கராசா ஆகியோரின் அடையாள அட்டைகள் 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வநது பெற்றுக்கொள்ளவும்.

## யாருடைய சைக்கிள்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் ராணுவ நடவடிக்கையின்போது கைவிடப்பட்ட Duro சைக்கிள் கீழ் கண்ட விலாசத்தில் இருக்கிறது உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும். அலங்கார் ஜுவெலரி கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வெளிநாட்டு காசோலை

காரைநகர் சிவன்கோவில் வீதி திருமதி சரஸ்வதி சபாநாதனுக்கு ஜெர்மனியிலிருந்து எஸ், யீ சபாநாதன் அனுப்பிய D N 150க்குரிய காசோலை ஆர். ரவீந்திரன், பி. பேட்றம், டி. மக்ஸன் ஆகியோரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

# கூட்டுறவுச் சங்கத்தில் ரூ28,000 கொள்ளை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி ப. நோ கூ. சங்கத்தில் இனம் தெரியாத இரு துப்பாக்கி இளைஞர்களினால் 28,060 ரூபா பணம் கொள்ளையடிக்கபபட்டுள்ளது

நேற்று முன்தினம் பகல் 11 45 மணியளவில் சங்கத்தில் புகுந்த இரு இளைஞர்களும் துப்பாக்கியை காட்டி கசாளரை பயமுறுத்தி மேற்படி பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர்பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. [சூ]

**பவர்ஸ் உரம்**
வெல்லமுடியாதது
ABC
MASTERS ABC 4/82 (D)
ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1. தொலைபேசி: 20551-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் நேற்று நடந்தது
# இலங்கைத் தமிழர்களின் பிரமாண்ட ஊர்வலம்!

(லண்டனிலிருந்து 'மாலி')

**இலங்கைத் தமிழர்கள் படும் துயரத்துக்கு தீர்வு ஏற்பட வேண்டுமென்று கோரி லண்டன் வீதிகளில் நேற்று பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடந்தது.**

நூற்றுக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கிக் கொண்டு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக ஆங்கிலத்தில் கோஷங்களையிட்டவாறு சென்ற இந்த ஊர்வலம் பிரிட்டனிலுள்ள ஆங்கிலேயர்களின் கவனததை பெரிதும் ஈர்ந்தது.

லண்டனிலுள்ள முக்கியவீதிகளில் எல்லாம் இந்த ஊர்வலம் நகர்ந்து சென்றது. ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இந்திய இனத்தவரும் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

தமிழ்ஈழ ஆதரவுக் குழுவும் தமிழ் மறுமலர்ச்சிச் சங்கமும் இவ் ஊர்வல ஏற்பாட்டைச் செய்திருந்தனர்.

பிரிட்டனின் பத்திரிகை நிறுவனங்கள் அமைந்துள்ள 'ப்ளீட் ஸ்றீட்' வழியாக ஊர்வலம் சென்றபோது லண்டன் பத்திரிகையாளர்கள் 'காமிரா'க்களும், கவனமும் ஊர்வலத்தைக் ஈர்ந்தது.

'ப்ளீட் ஸ்றீட்' பத்திரிகையாளர்களுக்கு இப்போதுஇலங்கைத் தமிழர் பிரச்னை தண்ணிபட்டபாடாக' இருப்பதால் இன்றைய லண்டன் தினசரிகளில் இந்த ஊர்வலம் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொள்ளும்.

இந்தஊர்வலத்தில் அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்கள் சுலோக அட்டைகள் முக்கியத்துவம் பெற்றன.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான ராணுவநடவடிக்கைகளில் அமெரிக்கா பங்குகொள்கிறதென்று குற்றஞ்சாட்டி, அதனை எதிர்த்தே இந்தக் கோஷங்கள் அமைந்தன.

ஊர்வலம் பல வீதி வழியாகச் சென்று, 'டெம்பிள் பூங்கா'வை அடைந்தது.

---

## நத்தார் திருப்பலி நள்ளிரவில் இல்லை!

[யாழ்ப்பாணம்]

வழக்கமாக நடைபெறுவது போல நத்தார் திருப்பலி இம்முறை நள்ளிரவில் நடைபெற மாட்டாது.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டாலும் நத்தார் திருப்பலியை நள்ளிரவில் நடத்தவேண்டாம் என்று யாழ் மறை மாவட்டத்திலுள்ள சகல பங்குக்குரவர்களும் கேட்கப்பட்டுள்ளனர்.

யாழ் மறை மாவட்ட தேவாலயங்களில் இம்மாதம் 24ம் திகதி நள்ளிரவு நடைபெறவிருந்த நத்தார் திருப்பலி, வடபகுதியில் தற்போது நிலவும் பதட்டநிலைமை காரணமாக ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டாலும் மக்களின் பாதுகாப்பை முன்னிட்டு ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கத்தோலிக்க அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

---

## இந்தப்பகுதி தொலைபேசிகள்
## நீண்டகாலமாக 'அவுட்ஒவ் ஓடர்'!

(சுண்டுக்குழி)

யாழ். மாவட்டத்திலுள்ள பல பகுதிகளிலுள்ள தொலைபேசித்தொடர்பு நீண்டநாட்களாக 'அவுட்ஒவ் ஓடராக'வே இருக்கின்றன. வடமராட்சிப் பகுதியின் தொடர்பு யாழ்ப்பாண தொலைதொடர்பு பரிவர்த்தனையுடன் எவ்வித தொடர்புமில்லாமல் நிரந்தர ஓய்வுபெற்றுவிட்டதோ என்ற சந்தேகத்துடன் இருந்துவருகிறது.

இதேபோன்று தீவுப்பகுதி, மானிப்பாய், பண்டைத்தரிப்பு, அச்சுவேலி போன்ற இன்னும் பல பகுதிகளுடன் யாழ்ப்பாணத்திலிருந்து தொடர்புகொண்டு பல நாட்களாகிவிட்டன.

இதுசம்பந்தமாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை விசாரித்தபோது, நாட்டின் சீரற்ற நிலைமையை அடுத்து ஏற்பட்டுள்ள வாகனத்தட்டுப்பாடும், புதிய கெடுபிடிகளும் இவ்வித நிலைமையை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்தனர்.

இந்த நிலைமை நீங்காதா என்று கேட்டதற்கு, ஊழியர்கள் அவ்விடங்களுக்குச்சென்று திருத்தவேலைகளை மேற்கொள்வதற்கு வாகனங்கள் இல்லையென்றும் புதிய சட்டவிதிகளின் தாக்கம் தொடர்வதாலும் இப் பிரச்னையைத் தீர்ப்பது பெரும் பிரச்னையாக உள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டது

---

## தமிழ்ப் பிரதேசம் பயங்கர...

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

விசேட தூதுவர் திரு ஜி. பார்த்தசாரதி தமிழர் விடுதலைக் கூட்டணியை தொடர்ந்து பேச்சு வார்த்தைகளில் ஈடுபட செய்வதில் முக்கிய பங்கு வகித்தார்.

'சிலர் இந்தியாவின் இந்த உதவிகள் குறித்து தப்பபிப்பிராயங்களை வெளியிட்டதையடுத்து நான்இந்த உண்மையை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

''இந்தியா அமைதியான அரசியல் தீர்வை ஏற்படுத்துவதில் ஒரு மிகப்பெரிய காரணியாக விளங்குகிறது.

### தனிநாட்டுக்காக தேர்ந்தனர்

''எம்மைப் பெரும் பலத்துடன் நனிநாடு ஒன்றை அமைக்கவேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ்மக்கள் தேர்ந்தெடுத்தனர் ஆயினும் அந்த இலட்சியத்துக்கு சமமான ஒரு ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை அரசாங்கம் முன் வைத்தால் நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளோம் என்ற எமது கருத்தை மாநாட்டின் ஆரம்பத்தின்போது நாம் வலியுறுத்தினோம்.

''இதனை எமது மக்களுக்கு சிபார்சுசெய்யவும் நாம் தயாராக இருந்தோம்.

அரசுதரப்பு முக்கிய பிரமுகர்கள் தமது பிரதான பங்களிப்பை வழங்காத நிலையில் இந்நாட்டின் முக்கிய எதிர்க்கட்சியும் இந்த மகாநாட்டிலிருந்து வெளிநடப்புச் செய்தது

''ஆனால் வன்முறையில் நாம் கொண்டிருந்த அவநம்பிக்கை காரணமாகவும், ஒருங்கிணைந்த எமது கூட்டுமுயற்சி காரணமாகவுமே நாம் இந்த மாநாட்டில் தொடர்ந்து பங்குகொண்டோம்

இம்மாநாட்டில் இ தொ. கா. தெரிவித்த யோசனையை நாம் மது மக்களுக்குச் சிபார்சுசெய்யக் கூடியதாக அமைந்திருந்தது. காரணம், வடக்-கிழக்கை மொழி ரீதியாக இணைத்து ஒரு பிரதேச சுயாட்சியைத் தமிழ் மக்களுக்கு வழங்கக்கூடிய வழியை அந்த யோசனை தெரிவித்திருந்தது.

அந்த சுயாட்சியில் சட்டங்களை இயற்றவும், நிர்வாக அதிகாரங்களை அமுல்படுத்தவும், குறித்த சில முக்கியமான விடயங்களைத் தயாரிக்கவும் அதிகாரமளிக்கப்பட வேண்டும் என நாம் குறிப்பிட்டோம்.

கூடவே உள்ளூர்ப் பாதுகாப்பு, உள்ளூர் நீதி நிருவாகம் சமூக, பொருளாதார அபிவிருத்தி, கலாச்சாரவிவகாரங்கள், காணி விவகாரங்கள் என்பவற்றைக் கையாளும் பொறுப்பையும் அது கொண்டிருக்கவேண்டுமென நாம் வலியுறுத்தினோம்.

இந்நிலையில் நாம் வலியுறுத்திய சுயாட்சிக் கோரிக்கை புதிய நகல் யோசனைகளில் மிகவும் தொலைவில்இருப்பதை அந்த யோசனைகளை உன்னிப்பாக அவதானிப்பவர்கள் நன்கு அறியமுடியும்.

1980ம் ஆண்டில் மாவட்ட அபிவிருத்திசபையை நாம் ஏற்றுக்கொண்டது, தனிநாட்டுக் கோரிக்கைக்குப் பதிலாக அல்ல என்பது தெளிவாக புரியும்.

அத்துமீறல் குடியேற்றங்கள், நீடித்தபதற்றம் போன்ற சுமையான பிரச்னைகளை இந்த அமைப்பு ஓரளவு தணித்து பெருமளவிலான அரசியல் தீர்வுகான சூழ்நிலையை இது உருவாக்கும் என்றே நம்பப்பட்டது. ஆனால் தகுந்த அணுகுமுறையுடன் ஒரு சரியான திட்டமொன்றை அரசாங்கம் கண்டுபிடிக்கத்தவறியதே இன்றைய நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும். பழைய சட்டங்கள்தொடர்ந்து மீண்டும் கொண்டுவரப்படுவது தமிழர்களால் ஏற்க முடியாததாகவுள்ளது.

மாகாண சுயாட்சிக்கோ, அல்லது அதிகார பரவலாக்கலுக்கோ சரியான திட்டம் எதையும் புதியநகல் மசோதா கொண்டிருக்கவில்லை.

### ஆச்சரியம்

அரசியல் அமைப்பில் மட்டுமே எமது பிரதான கோரிக்கைக்கான தீர்வுகள் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

இந்த அம்சத்தைக்கூட சில முக்கிய பொறுப்புள்ள நபர்கள் எதிர்க்கிறார்கள் என்பதை அறிந்து நான் ஆச்சரியப்படுகிறேன். சர்வகட்சி மகாநாட்டிலும், நாம் கலந்து கொண்ட வேறு கூட்டங்களிலும் நியாயமான தீர்வொன்றை மகாநாடு கண்டுபிடிக்க வேண்டுமென்பதையே நாம் வலியுறுத்துகிறோம்.

நாளும், நேரமும் குறுகிக் கொண்டே செல்கிறது இந்த மகாநாட்டின் தீர்வுகள் என்று சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு மசோதாக்களும், சுயாட்சியை ஏற்படுத்தக் கூடிய எந்தயோசனைகளையும் தமிழ்மக்கள் எதிர்பார்க்கும் தீர்வுகளையும் கொண்டிருக்கவில்லை என்பதனை நகம் மிகுந்த கவலையுடன் தெரிவிக்கின்றோம் (கி)

---

## வெளிநாட்டுத்...

(1ம்பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

கடிதங்களில் எழுதப்பட்டிருக்கின்றன.

கனடா, டென்மார்க், மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், சவுதி அரேபியா போன்ற பல நாடுகளிலிருந்து இக்கடிதங்கள் பொன்னாலை, பண்டத்தரிப்பு, கொக்குவில், கோண்டாவில், சுழிபுரம், சங்கானை, ஏழாலை, மானிப்பாய், ஆனைக்கோட்டை, அல்வாய், கல்வியங்காடு, அச்சுவேலி, காரைநகர், கொக்குவில், மல்லாகம், புத்தூர், இளவாலை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், யாழ். 5ம் குறுக்குத்தெரு, நல்லூர் ஆகிய இடங்களிலுள்ள விலாசதாரர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன.

வாழ்க்கைச் செலவுக்கும், கடன் தீர்ப்பதற்கும் அனுப்பி வைக்கப்பட்ட காசோலைகள் கடித உறைகளிலிருந்து 'கபளீகரம்' செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது

அந்தவகையான கடிதங்களை மீட்டெடுத்த இளைஞர்கள், உரிய அதிகாரியைச் சந்தித்து அவற்றைக் காண்பித்தபோது அவ்வதிகாரி பேரதிர்ச்சிக்குள்ளானாராம்.

இப்படியான பொறுப்பற்ற நாசகாரச் செயலில் இறங்கியவர்களைக் கண்டுபிடித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்கப் போவதாக அவ்இளைஞர்களுக்கு அவர் உறுதியளித்துள்ளார்.

---

## இப்படியும் நடந்தது!

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டைப்பகுதியில் பூட்டப்பட்டிருந்த தச்சுத் தொழிற்சாலையிலிருந்துகடந்த வெள்ளிக்கிழமை இரவு ஊரடங்குச் சட்டநேரத்தின்போது ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான மரர்கள், புதிய கதவுகள் ஆகியன திருடப்பட்டுள்ளன.

இந்தத் தச்சுத் தொழிற்சாலையின் உரிமையாளரும் இதன் சில தொழிலாளர்களும் இராணுவத்தினர் சமீபத்தில் இப்பகுதியில் நடத்திய வீடு வீடான தேடுதலின் போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

---

## இரத்தக்கறை....

(1ம் பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

சந்தியில் இறங்கி நடந்து சென்று லொறியைக் கைப்பற்றியுள்ளனர்

இது நிற்க கடத்தப்பட்ட இரு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களின் நிலைகுறித்து, இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை தெரிவிக்கப்படவில்லை.

(மா)

---

## இந்திய நடவடிக்...

(1ம்பக்க 3ம் கலத்தொடர்ச்சி)

நாம் எதிர்க்கவில்லை.

மாவட்டசபைகளுக்கு அதிக அதிகாரம் வழங்குவது பற்றி நாம்பரிசீலிக்க தயாராக உள்ளோம். மாகாண சபைகள் மத்திய அரசின் கீழ்தான் இயங்கும். சர்வகட்சிமாநாட்டு யோசனைகளை எதிர்ப்பதற்காக மக்கள் நேரடி நடவடிக்கைளில் இறங்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

---

## இந்தியா விரை...

[1ம்பக்க 3ம்கலத்தொடர்ச்சி]

''இப்பிரச்னை தமிழ்நாட்டை மாத்திரம் பாதிக்கும் ஒன்றல்ல முழு இந்தியாவையுமே பாதிக்கும் மிகப் பெரியதோர் பிரச்னையாகும். முக்கியமாக அங்கு இடம்பெறும் வன்முறைகளினால் 40,000க்கும் அதிகமானோர் அகதிகளாக இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளனர். இது இந்தியாவுக்குப பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

''தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதற்குக் கொழும்பில் நேற்று முன்தினம் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை. இது மிகவும் கவலைக்குரியதோர் விடயமாகும். இம்மாநாடு உடன்பாடு காணாமல் முடிவடைந்தமையினால் இலங்கையில் தோன்றியுள்ள நிலைமையை இந்தியா பரிசீலிக்கவேண்டியுள்ளது.

''இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு இந்தியா எல்லாவிதத்திலும் உதவிசெய்ய வேண்டியுள்ளது. ஆனால் எவ்வாறு உதவவேண்டும் என்பதனைத் தீர்மானிக்க வேண்டியிருக்கின்றது'' என்றும் பிரதமர் தெரிவித்தார் (சூ)

---

## மரண அறிவித்தல்
### பூ. வ. கந்தையா

குரும்பசிட்டியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் கெக்கிராவ பூ. வ. கந்தையா காலமானார் இவர் திருமதி நாகம்மாவின் அன்புக் கணவரும், சத்தியமூர்த்தி [R.M.P மாவட்ட வைத்தியசாலை வத்துமூலை] ஈஸ்வரமூர்த்தி [பொறியியலாளர் பிறேசில்] சக்திமலர், சிவமலர் [லண்டன்], கருணாமூர்த்தி [ஜேர்மனி], யோகமூர்த்தி [பட்டயக் கணக்காளர் கொழும்பு], குமாரமூர்த்தி [உரிமையாளர் பாமா ஜுவல்லர்ஸ்] ஸ்கந்தமூர்த்தி [யாழ்: பல்கலைக்கழகம்] ஆகியோரின் தகப்பனாரும், சாந்தகுமாரி, மாலினி [இலண்டன்] கணேசன் [மிருக வைத்தியர்] ஸ்ரீஸ்கந்தபாலன் [பொறியியலாளர் லண்டன்] நாகேஸ்வரி, சாந்தகுமாரி [வர்த்தக வங்கி கொழும்பு], தாரிணி ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 24ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு குரும்பசிட்டி மயானத்தில் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும். 1064

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம்ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPaper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org